சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **114 / 2013**

பெயர்: ஆதிசேஷன் வா.சா.1 தேதி **30.06.2025**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் பெயர் சந்தானம். எனது தாயார் பெயர் ராஜராஜேஸ்வரி. மேற்படி எனது பெற்றோர்களுக்கு நானும், நான்காவது வாதியும் தான் வாரிசுதாரர்கள். முதல் பிரதிவாதி எனது பெரியப்பா. அவர் எனது தகப்பனாருடன் பிறந்தவர். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் எனது தகப்பனாரை சேர்ந்து மூன்று நபர்கள். இரண்டாவது பிரதிவாதி எனது அத்தை அவர் தற்பொழுது உயிருடன் உள்ளார். நான் இரண்டாவது பிரதிவாதியுடன் இணக்கமாக தான் உள்ளேன். எனது அப்பாவின், அப்பா பெயர் கருப்பா நாயக்கர். மேற்படி எனது தகப்பனார், 1,2 பிரதிவாதிகள் எனது தாத்தா கருப்பா நாயக்கருக்கும், அவரது மனைவி முத்தம்மாளுக்கும் பிறந்தவர்கள். கருப்பா நாயக்கர் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. கருப்பா நாயக்கரை நான் பார்த்ததே இல்லை. மேற்படி கருப்பா நாயக்கருக்கு பெரியக்காள் என்ற ஒரு மனைவி இருப்பதாகவும், அவர் வழியாக வீரமுத்து, மீனாட்சி, மணி ஆகியோர்கள் பிறந்துள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்கின்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தானது கட்டளை கிராமம் சர்வே எண்.210/2, 210/8, 240/7, 227/2A, 227/2A-ல் மற்றொரு பாகமும் உண்டு. நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் விவசாயம் பார்ப்பதில்லை. எனக்கோ, எனது சகோதரிக்கோ திருமணம் ஆகவில்லை. முத்தம்மாள் 2011ம் ஆண்டில் இறந்தார். பெரியக்காள் என்பவரை நான் பார்த்ததே இல்லை. வழக்கு சொத்தில் கிணறு உள்ளது. மேற்படி கிணற்றில் மின் மோட்டார் உள்ளது. மேற்படி மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் கருப்பா நாயக்கருக்கு பாத்தியப்பட்டதா என்றால் பாட்டி முத்தம்மாளுக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டதாக எனது தகப்பனார் என்னிடம் சொன்னார். எனது பாட்டி வேலை எதுவும் பார்த்தாரா என்றால் இல்லை. (முதல் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.